# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

### *2023 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2023.05.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தம்)

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இரான் விக்கிரமரத்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 25.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

இச்சட்டமூலம், பின்வருவனமூலம் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கு நாடுகின்றது.

(அ) குறித்துரைக்கப்பட்ட தகவல்களின் திருத்தத்துக்கமைய, சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் இலத்திரனியற் சமர்ப்பணங்களையும், அவற்றுக்குப் பொதுமக்களின் அணுக்கத்தையும் இயலச்செய்கின்ற இலத்திரனியல் தன்னியக்கமாக்கப் பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையொன்றை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்செய்வதற்கான ஆணைக்குழு தாபிப்பதற்கு ஏற்பாடு செய்தல்;

(ஆ) தனியாளொருவரின் தேறிய சொத்துக்கள், முன்னா வெளிப்படுத்தப்பட்ட பணத்தொகையைக் குறித்துரைக்கப்பட்டவொரு தொகையினால் விஞ்சுமிடத்து, ஓர் ஆண்டின்போது அதிவிசேட சொத்து வெளிப்படுத்துகைகளைக் கோப்பிடுவதற்காக ஏற்பாடு செய்தல்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்குச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளைத் தோதான அதிகாரி அனுப்பிவைப்பதற்காக ஏற்பாடு செய்தல்;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட தகவல்களின் திருத்தத்துக்கமைய, சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளுக்குப் பொதுமக்களின் அணுக்கத்துக்காக ஏற்பாடு செய்தல்;

(உ) பொதுமக்களுக்குச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் பிரதிகளை வழங்கும்போது திருத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பாக இரகசியத்தைப் பேணுவதற்காக ஏற்பாடு செய்தல்;

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்செய்வதற்கான ஆணைக் குழுவினால் அல்லது அதன் சம்மதத்துடன் மட்டுமே சட்டத்தின் நியதிகளின்படி குற்ற வழக்குகள் தொடக்கி வைக்கப்படுவதற்காக ஏற்பாடு செய்தல்; மற்றும்

(எ) சட்டத்துக்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்தல்.

## சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தம்)

### 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) சனாதிபதி;"

(2) பந்தி (ஈஅ) வில், "1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின்" என்னும் சொற்களை நீக்குவதன்மூலமும்;

(3) பந்தி (ஈஇ) இல், "1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின்" என்னும் சொற்களை நீக்குவதன்மூலமும்;

(4) பந்தி (ஈஈ) யை நீக்கிவிடுவதன் மூலமும் ; மற்றும்

(5) பந்தி (ஈஉ) இல், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) உட்பிரிவு (1) இல் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

''ஆயின், பிரிவு 4அ வின்படி இலத்திரனியல் தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையினூடாக இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவரினால் தோதான அதிகாரசபைக்குச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வெளிப்படுத்துகை இப்பிரிவின் நோக்கங் களுக்காக முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் / கொள்ளப்படுதல் வேண்டும்.'';

(2) உட்பிரிவு (2) இல், ''மூன்று மாதங்களுக்குள்ளாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு மாதத்திற்குள்ளாக'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; மற்றும்

(3) உட்பிரிவு (3) வை உடனடுத்து, 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பினவருவதனை உட் புகுத்துவதன்மூலமும்:-

''(4) மேலே (3) ஆம் உட்பிரிவைப் பின்பற்றிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வருடாந்த வெளிப்படுத்துகையொன்று கோப்பிடப்பட்டதனை யடுத்து, இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர், அடுத்த கோப்பிடுவதற்கான திகதிக்கு முன்னர் பத்து மில்லியன் ரூபாவுக்கு மேலாக அத்தகைய ஆளின் தேறிய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வேறுபடுத்துகின்ற விளைவைக் கொண்டிருக்கும் ஒரு கொடுக்கல், வாங்கலில் அல்லது திரண்ட கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து மூன்று

மாதங்களினுள் அமைச்சரினால் ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்தில், பத்து மில்லியன் ரூபாவான தொடக்க நிலை எதிர்கொள்ளப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய அதிவிசேட வெளிப்படுத்துகையொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) பிரிவு 4 இன் ஏலவேயுள்ள ஏற்பாடுகளை 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அதன் பந்தி (அ) வின் உட்பந்தி (ii) இல், "பிரதி அமைச்சர்களினாலும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரவையின் உறுப்பினர்களாகவுள்ளவர்களினாலும் அமைச்சரவையின் உறுப்பினர்களாகவிராத அமைச்சர்களினாலும், பிரதி அமைச்சர்களினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) சனாதிபதியினால், பாராளுமன்றச் சபாநாயகரின் அலுவலகத்துக்கும்;"

(4) அதன் பந்தி (iஅ) வின் (i) ஆம் உட்பந்தியில், "1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின்" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(5) அதன் பந்தி (iஅ) வின் (ii) ஆம் உட்பந்தியில், "1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (தேர்தல்கள்) சட்டத்தின்" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(6) அதன் (iஇ) என்னும் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்;

(7) அதன் பந்தி (iஈ) என்னும் உட்பிரிவில், “1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(8) உட்பிரிவு (1) ஐ உடனடுத்து, 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(2) இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய தனது வெளிப்படுத்துகையை இலத்திரனியல் தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையினூடாகச் சமர்ப்பிக்க இயலாதவராக உள்ளவிடத்து, தோதான அதிகாரசபையால், பெறப்பட்டதிலிருந்து இருவாரங்களினுள் அத்தகைய வெளிப்படுத்துகையை அத்தகைய முறைமைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.”

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“இலத்திரனியல் தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையொன்றைத் தாபிப்பதற்கான கடமை

4அ. (1) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இச்சட்டம் வலுவுக்கு வருவதிலிருந்து 18 மாதங்களுள், பின்வருவனவற்றை இயலச் செய்கின்ற ஓர் இலத்திரனியல் தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்:-

(அ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் இலத்திரனியல் சமர்ப்பிப்பு;

(ஆ) 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக் கிணங்கச் சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றிய நிமித்த வெளிப்படுத்து கைகளின் சமர்ப்பிப்பு;

(இ) நேரகாலத்தன்மை, செம்மை மற்றும் பூர்த்தியான தன்மைக்காக வெளிப் படுத்துகைகளின் வழக்க முறையான சரி பார்த்தல்;

(ஈ) தன்னியக்கமாக்கப்பட்ட முறைமையி னால் கண்டுபிடிக்கப்பட்ட சந்தேகத்துக் கிடமான கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான சரிபார்த்தல்;

(உ) பெறப்பட்ட முறைப்பாடுகளைச் சரிபார்த்தல்; மற்றும்

(ஊ) வங்கிக் கணக்கு இலக்கங்கள், உரித் துறுதி இலக்கங்கள், மத்திய வைப்பக முறைமை இலக்கங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ் இலக்கங்கள், வங்கி வைப்புப் பெட்டி இலக்கங்கள் என்பவற் றிற்கான திருத்தத்துக்கமைய அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறெவையேனும் ஒத்த தகவல்களின் திருத்தத்துக்கமைய சொத் துக்களும் பொறுப்புக்களும் பற்றிச் சமர்ப் பிக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளுக்குப் பொதுமக்களின் அணுக்கம்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையினூடாகத் தோதான அதிகாரசபையுடன் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றியவொரு வெளிப்படுத்துகையைக் கோப்பிடுதலானது, 4 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக முறையான தோதான அதிகாரசபையுடன் சேர்த்து மேலதிகமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; மற்றும்

(3) இடைக்கால காலப்பகுதியின்போது, பிரிவு 4அ வில் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட இலத்திரனியல் தன்னியக்கமாக்கப்பட்ட சொத்து வெளிப்படுத்துகை முறைமையைத் தாபிப்பதற்கு முன்னர், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகள், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியான படிவத்தில் தொடர்ந்தும் கோப்பிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல் (சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல் சமர்பிக்கும் தத்துவம்)

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவு (2) இல், "இலஞ்ச ஆணையாளர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(2) உட்பிரிவு (2) ஐ உடனடுத்து, 5 ஆம் பிரிவின் (2அ) மற்றும் (2ஆ) என்னும் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்

குழு, சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளைக் காலத்துக்குக்காலம் பகுப்பாய்வுசெய்தல் வேண்டுமென்பதுடன் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அத்தகைய நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும்.

(2ஆ) பிரிவு 3 யின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய எல்லா வெளிப்படுத்துகைகளும், அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்டதிலிருந்து இருாரங்களினுள் வங்கிக்கணக்கு இலக்கங்கள், உரித்துறுதி இலக்கங்கள், மத்திய வைப்பக முறைமை இலக்கங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ் இலக்கங்கள், வங்கி வைப்புப்பெட்டி இலக்கங்கள் என்பவற்றிற்கான திருத்தத்துக்கமைய மற்றும் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் ஒத்த தகவல்களின் திருத்தத்துக்கமைய தோதான அதிகாரியினால் அவர்களின் முறையான அலுவலக முறையான வலைத்தளத்தின்மீது பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும். அலுவலக முறையான வலைத்தளமொன்று இல்லாதவிடத்து, பிரிவு 3 இன்படி சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய எல்லா வெளிப்படுத்துகைகளினதும் பிரதிகள், பொதுமக்களின் அணுக்கத்துக்காக, தோதான அதிகாரியின் வளவுகளின்மீது கட்டணமின்றி தோதான அதிகாரசபையினால், மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறான திருத்தங்களுக்கு அமைய, கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு 3 இல், “தோதான அதிகாரசபைக்கு விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றைச் செலுத்துவதன்மேல், சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஏதேனும் வெளிப்படுத்துகையைக் கேட்டுப் பெறுவதற்கும் பார்ப்பதற்கும் உரிமை உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்துரைக்கப்படும் மேலும் ஒரு கட்ட

ணத்தைச் செலுத்துவதன்மீது, அத்தகைய வெளிப்படுத்துகையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெறுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோதான அதிகாரசபைக்கு இருநூற்றைம்பது ரூபாவான கட்டணமொன்றைக் கொடுப்பனவு செய்வதன்மீது, இப்பிரிவின் 2ஆ என்னும் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அத்தகைய திருத்தங்களுக்கு அமைய, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவன் மூலமும்.

(4) உட்பிரிவு (3) இல், "இவ்வுட்பிரிவில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இப்பிரிவில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) உட்பிரிவு (3) இல், "4 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "4 ஆம் பிரிவின்கீழ் அல்லது 4அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல் மேலதிகத் தகவல்களைக் கோருவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவுக்குள்ள தத்துவம்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, "இலஞ்ச ஆணையாளர்"என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவுகள் (4) மற்றும் (5) ஐ நீக்கிவிடுவதன்மூலமும்; மற்றும்

(2) உட்பிரிவு (6) இல், "இலஞ்ச ஆணையாளர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"திருத்தத்தின் மூலம் இரகசியத்தைப் பேணிக்காத்தல்

8. (1) பிரிவு 3 இன் (4) ஆம் உட்பிரிவு, பிரிவு (4) ஆம் அல்லது பிரிவு 4அ என்பவற்றைப் பின்பற்றி பெறப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றுக்கான அணுக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் பகிரங்க சேவையாளர், அத்தகைய வெளிப்படுத்துகை வேறெவரேனுமாளுக்கு வழங்கப்படும்போது அத்தகைய பகிரங்க சேவையாளர் வங்கிக்கணக்கு இலக்கங்கள், உரித்துறுதி இலக்கங்கள், மத்திய வைப்பக முறைமை இலக்கங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ் இலக்கங்கள், வங்கிவைப்புப் பெட்டி இலக்கங்கள் என்பவற்றிற்கான மற்றும் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் ஒத்த தகவல்களின் திருத்தத்துக்கமைய எல்லாக் குறிப்பீடுகளையும், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகத் திருத்தப்பட்டிருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய வேறெவையேனும் தகவல்களையும் திருத்தியிருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பகிரங்க சேவையாளர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்

புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் வெளிப்படுத்துகைகளின் பிரதிகளிலிருந்து அல்லது ஏதேனும் குற்றவியற் புலனாய்வின் நோக்கத்துக்காக எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்குத் தகவல்களைத் திருத்துவதற்குக் கடப்பாடுடையவராதலாகாது.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் பகிரங்க சேவையாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவில், "பகிரங்க சேவையாளர்" என்பது, பிரிவு 3 வின் (4) ஆம் உட்பிரிவு, பிரிவு (4) அல்லது பிரிவு 4அ இன்கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய அந்த வெளிப்படுத்துகை எந்தத் தோதான அதிகாரிக்குச் செய்யப்பட்டுள்ளதோ அந்தத் தோதான அதிகாரியொருவரினால் தொழிலுக் கமர்த்தப்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) உட்பிரிவு (1) இன் (இ) என்னும் பந்தியில், "இலஞ்ச ஆணையாளர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(2) உட்பிரிவு (1) இல், "ஓராயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) உட்பிரிவு (1) ஐ உடனடுத்து, 9 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரு வதனை இடுவதன் மூலமும்:-

"(1அ) உட்பிரிவு (1) யின் (ஆஆ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் குற்றவழக்கின் நோக்கங்களுக்காக, ஆளினால் முரணாக எண்பிக்கப்படும்வரை, அத்தகைய வெளிப்படுத்தப்படாத சொத்து அல்லது பொறுப்பு அத்தகைய வெளிப்படுத்துகையிலிருந்து வேண்டு மென்று விட்டுவிடப்பட்டதென ஊகிக்கப்படுதல் வேண் டும்.".

(4) உட்பிரிவு (3) யில், "ஓராயிரம் ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) உட்பிரிவு (3) யில், "ஐம்பது ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; மற்றும்

(6) உட்பிரிவு (5) இல், "சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன்னனுமதியுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்செய்வதற்கான ஆணைக்குழுவின் முன் னனுமதியுடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ எனும் பிரிவைத் திருத்துதல்

(1) பந்தி (ஆ) இல், ''சட்டத்துறைத் தலைமையதிபதியின்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; மற்றும்

(2) பந்தி (எ) இல், ''சட்டத்துறைத் தலைமையதிபதியின்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவை நீக்குதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல் (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச்சட்டம் தவிர, இச்சட்டம் ஏனைய சட்டங்களின்மீது மேலோங்கி நிற்றல்)*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, ''இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்துக்கான விதிவிலக்குடன் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''சொத்துக்களும் பொறுப்புக்களும்'' என்பன் வரைவிலக்கணத்தில், ''முழுமையாகவோ அல்லது

பகுதியாகவோ,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வெளிப் படுத்துநரினால் சொந்தமாக வைத்திருக்கப்படுவதும் அல்லது வங்கிக் கணக்குகளில் அல்லது ஏதேனும் வடிவத்தில் வெளிப்படுத்துநரினால் வைத்திருக்கப் படுவதும்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; மற்றும்

(2) ''உள்ளூரதிகாரசபை'' என்பதன் வரைவிலக்கணத்தில், ''அல்லது அபிவிருத்திச்சபை'' என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.